**தேசிய சேமிப்பு வங்கி - 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

தேசிய சேமிப்பு வங்கியினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் ("தொகுதி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் திரட்டிய நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் 2018 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியினது உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 இல் மோசடியாக வரையப்பட்டதிலிருந்து வங்கிக்கு பெறப்பட வேண்டிய தொகை ரூபா. 110.5 மில்லியன் பெறுமதியாகும் மற்றும் இது தொடர்பாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா. 15.7 மில்லியன் அல்லது 16.6 சதவீதம் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இந்த பெறப்பட வேண்டிய | 2018 திசெம்பர் 31 இல் மொத்த மோசடியாக செலுத்தப்பட்ட தொகை ரூபா. 110.5 மில்லியனுக்கு எதிராக ரூபா. 86 மில்லியனுக்கு போதுமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மற்றும் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் | நீண்ட கால நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| தொகை அதிகரித்தமைக்கு தலைமை அலுவலக கிளையில் மோசடிகள் ஏற்பட்டமையே பிரதான காரணமாகவுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட தொகையில் ரூபா. 85 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவைகளாக காணப்படுவதுடன் ரூபா. 29 மில்லியன் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைகளாக தொடர்ச்சியான காணப்படுகின்றன. | மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. | |
| (ii)2016 ஆம் ஆண்டில் வங்கியினால் என்ராஸ்ட் செக்கியூரீட்டிஸ் பிஎல்சியில் திறைசேரி பிணையின் மீது பணமானது முதலீடு செய்யப்பட்டிருந்துடன் 2019 யூன் 30 ஆம் திகதி வரையான கணக்காய்வின் போது பெறப்பட வேண்டிய வட்டி வருமான நிலுவை ரூபா. 153.6 மில்லியன் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்தில் கொள்ளப்பட்டது. | பெறப்பட வேண்டிய மீதிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 1.5.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2018 திசெம்பர் 31 இல் மொத்த கடன் நிலுவைகள் மற்றும் முற்பண மீதியாக ரூபா. 329,131 மில்லியன் காணப்பட்டது. இத் திகதியில் செயற்பாடற்ற கடன் மீதியாக ரூபா. 5,212 மில்லியன் அல்லது 1.6 சதவீதமானது மற்றும் இதில் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 299,304 மில்லியன் மற்றும் ரூபா. 4,987 மில்லியனாகவும் காணப்பட்டது. மேலும், 2018 திசெம்பர் 31 இல் செயற்பாடற்ற கடன் நிலுவைகளில் கூட்டு மொத்தம் ரூபா. 143 மில்லியன் அல்லது 2.7 சதவீதமானது 3 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் நிலுவையாக காணப்படுகின்றன. | கருத்தில் கொள்ளப்பட்டது . | வங்கியின் செயற்பாடற்ற கடன்களை அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2018 செப்டம்பர் 17 இல் முதிர்ச்சியடைந்த பிணை, 750 மில்லியன் அமெரிக்க டொலர் வங்கியினால் திருப்பி செலுத்தப்பட்டது. 2018 செப்ரெம்பர் 17 இல் உரிய காலத்தில் முதிச்சியடைந்திருந்த அமெரிக்க டொலர் கடன் பொது சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (கேடியு) வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், அவர்கள் முதிர்ச்சியடைந்த காலப்பகுதியில் கொடுப்பனவுகள் செலுத்த முடியவில்லை. பிணையினை மீளச்செலுத்துவதற்கு 3 வருட காலத்திற்கான வட்டி வீத வேறுபாடு+2 சதவீதத்தில் ஜேர்மனி கொமஸ் வங்கியிலிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றுமொரு வெளிநாட்டுக்கடனினை வங்கி பெற்றுக்கொண்டது. | கருத்தில் கொள்ளப்பட்டது. | வங்கியினுடைய சுமூகமான செயற்பாட்டுத் தேவைகளுக்கு பொருத்தமான வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய உரிய தொகைகளை பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துதல். |
| (iii) | பாதுகாப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 2019 மார்ச் 25 திகதியிடப்பட்ட அமைச்சரவை குறிப்பின் படி, பொது சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (கேடியு) வழங்கப்பட்ட கடன்களில் திறைசேரி உத்தரவாதத்தின் காலத்தினை நீட்டிக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. இருப்பினும் இந்நாள் வரை திறைசேரி உத்தரவாதம் பெறப் பட்டிருக்கவில்லை. கடனை மாற்றியமைத்ததிற்கு பிறகு, வாடிக்கையாளர் கடன் தவணைக்கட்டணம் மற்றும் தண்டப்பணம் முறையே ரூபா. 56 மில்லியன், 19,364 மில்லியன் அமெரிக்க டொலர் குறித்த நேரத்தில் செலுத்த முடியவில்லை. ரூபா மற்றும் டொலர் கடன்கள் வாடிக்கையாளர் மீது விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இது இந்நாள் வரை செலுத்தப்பட்டிருக்கப்படவில்லை. | கருத்தில் கொள்ளப்பட்டது. | பொருத்தமான வாடிக்கையாளரிடமிருந்து உரிய நேரத்தில் அந்த அனைத்து உரிய தொகைகளையும் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துடன் தொடர்ச்சியாக காலம் நீடிக்கப்பட்ட திறைசேரி பிணைத்தொகை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (iv) | 2018 திசெம்பர் 31 இல் வங்கியால் செலுத்தப்பட்ட மொத்த நகை அடகு முற்பணங்கள் ரூபா. 28,010.16 மில்லியன் மற்றும் இதனுடைய சந்தைப் பெறுமதி ரூபா. 49,808.78 மில்லியனாக காணப்பட்டது. 2018 திசெப்பர் 31 இல் உள்ள மொத்த நகை அடகு முற்பணங்களில் ரூபா. 233.72 மில்லியன் செயற்பாடற்ற நகை அடகு முற்பணங்களிலாக காணப்பட்டது. | 2018 திசெம்பர் 31 இல் செயற்பாடற்ற கடன் விகிதம் 0.83 % இருந்து 0.78% ஆக குறைவடைந்தது. சட்ட வழக்குகள் மற்றும் விசாரணைகள் காரணமாக நகை அடகு முற்பணங்கள் மூன்று வருடங்களுக்கு மேலதிகமாக நிலுவையாக காணப்படுகின்றன. | வங்கியினுடைய செயற்பாடற்ற நகை அடகு முற்பணகளை அறவிட்டுக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் செயற்பாடற்ற முற்பணக்கணக்கின் வயதுப்பகுப்பாய்வு மதிப்பீட்டில் ரூபா. 211.46 மில்லியன் மற்றும் மீதியாகவுள்ள ரூபா. 22.25 மில்லியன் நிலுவை 1 தொடக்கம் 3 வருடங்கள் வரையான காலப்பகுதியினைக் கொண்டதாகவும் ஏனைய மீதிகள் 3 வருடங்களுக்கு மேற்பட்டதாகவும் காணப்படுகின்றன. | | |
| (v) | வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா. 8.15 மில்லியன் பெறுமதியான முற்பணங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவையாக தொடச்சியாக காணப்படுகின்றது. 2019 செப்ரெம்பரில் இதில் ரூபா. 4.08 மில்லியன் தொகையானது மீளப் பெறப்பட்டிருந்தன. எனினும், கணக்காய்வு திகதிவரை மீதி நிலுவையாக காணப்படுகின்றன. | 2019 செப்ரெம்பர் 25 ஆம் திகதி ரூபா. 4.08 பெறுமதியான தொகை பெறப்பட்டிருந்தது மற்றும் 2018 திசெம்பர் 31 இல் மீதியாகவுள்ள ரூபா. 4.07 பெறுமதியான தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. | பொருத்தமான வழங்குனரிடமிருந்து உரிய தொகையினை அறவிடுவதனை உறுதிப்படுத்துதல். |
| (vi) | குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு 2012 மே 11 ஆம் திகதியில் வங்கியால் தனிப்பட்ட கடன் ரூபா. 900,000 ஆனது வழங்கப்பட்டது. ஆவணக்கோவையில் இக்கடன்கள் தொடர்பான மூலப்பிரதிகள் தவறவிடப்பட்டிருந்தன. இரண்டு தவணைக்கட்டணங்கள் மட்டுமே அறவிடப்பட்டிருந்தன மற்றும் கடன் கோவைக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பிணையாளரிடமிருந்து அல்லது வங்கியின் கடன் சேகரிப்பு கொள்கை பிரிவு 8 மற்றும் 9 இன் பிரகாரம் கடனை சேகரித்துக் கொள்வதற்கு சட்ட் நடவடிகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கருத்தில் கொள்ளப்பட்டது. | ஆவணங்களின் பாதுகாப்பாக பாதுகாப்பதற்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் மற்றும் உரிய தொகையினை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கவும்.. |

**1.6 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **1971 ஆம் ஆண்டில் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்** | | | |
| i) பிரிவு 47 | 10 ஆண்டுகளுக்கு மேலாக செயற்படாத வைப்புக் கணக்குகளை ‘‘உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள்’’ கணகக்க்கு மாற்றப்பட்டன. எவ்வாறாயினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றில் ரூபா. 676.24 மில்லியன் செயற்படாத கணக்கு மீதிகள் ஒதுக்க கணக்கு மாற்றப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டன. | 2018 ஆம் ஆண்டில் உரிமை கோரப்படாத/ செயற்படாத வைப்புக் கணக்குகளில வரவாக ரூபா. 2001 மில்லியன் பெறுமதியான தொகை பெய்யாக வங்கியால் மாற்றப்பட்டிருந்தன. வாடிக்கையாளர்களின் கணக்கு இடமாற்றத்திற்கு காலத்திற்கு காலம் அதிக சதவீதமாக பிற்போட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. மீதித் தொகை எதிர்வரும் ஆண்டில் மாற்றுவதற்கு கருத்தில் கொள்ளப்படும். | உரிய சட்ட விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இணங்குவதனை உறுதிப்படுத்துதல் |
| ii) பிரிவு 47(4) | உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கங்களிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பணம் செயலாளர், பொது திறைசேரியின் திரண்ட நிதியிலிருந்து வங்கியினால் விரைவில் மீளப்பெற்றுக்கொள்ள முடியும். உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கங்களில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு 2000 – 2018 ஆம் காலப்பகுதியினுள் ரூபா. 474.18 மில்லியன் | திறைசேரியிடமிருந்து ஏற்கனவே கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் செயற்படாத கணக்குகளை மீளச் செலுத்துவதற்காக பொது திறை சேரியிடமிருந்து ரூபா. 300 மில்லியன் பெறுமதியான தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | திறைசேரியிடமிருந்து உரிய தொகையினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள்ப்பட வேண்டும் |

வங்கியால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டில் மீதி தொகை ரூபா. 300 மில்லியன் செயலாளர், பொது திறைசேரியிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டன. மற்றும் ஏனைய மீதிகள் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா. 4,500 மில்லியன் இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 9,716 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 5,216 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வியாபாரத்திலிருந்தன தேறிய இலாபம், வட்டி வருமானங்கள், தேறிய ஏனைய தொழிற்பாட்டு இலாபம், அசாதாரண செலவின அதிகரிப்புக்கள் மற்றும் ஆளணி செலவினங்கள் என்பன வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் நிகர வட்டி வருமானம் ரூபா. 249 மில்லியன் அல்லது 1 சதவீதம் குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் ஒன்பது மாத காலம் தொடர்பான உத்தேச வரியைக் கருத்தில் கொள்ளாதது மற்றும் நிலையான வைப்பு வட்டி வீதங்களின் அதிகரிப்பு காரணமாக வைப்பு செலவு அதிகரிப்பு ஆகியவை குறைக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. பங்கு மூலதனத்தின் நியாயமான பெறுமதி மற்றும் வங்கியின் அரசாங்க பிணைகள் பட்டியல் குறைந்து வருவதால் வர்த்தகத்தில் இருந்து தேறிய இலாபம் ரூபா. 1,913 மில்லியன் அல்லது 159 சதவீதம் குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான என்எஸ்பி நிதி முகாமைத்துவ நிறுவனத்தினால் பங்குலாபங்கள் அறிவிக்காததால் தேறிய தொழிற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா. 630 மில்லியன் அல்லது 37 சதவீதம் குறைந்துள்ளது. நட்டக்கழிவு ஏற்பாடுகள் முறையை ஏற்பட்ட நட்ட அணுகுமுறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செலவு குறைப்பு அணுகுமுறைக்கு மாற்றுவதன் காரணமாக ரூபா. 105 மில்லியனால் அல்லது 14 சதவீதத்தினால் ஏனைய நட்டங்கள் மற்றும் கடனுக்கான நட்டக்கழிவு கட்டணங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. 2018 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து கூட்டு ஒப்பந்ததிற்கு அமைய ஊழியர்களுக்கு சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா. 2,376 மில்லியன் மற்றும் 35 சதவீதத்தினால் வங்கியினுடைய ஆளணி வேதனச்செலவினம் அதிகரித்துக் காணப்பட்டது. 2018ஆம் ஆண்டில் சில ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் தரம் VI மற்றும் VII நிரந்தர ஆளணியினருக்குள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

இது தொடர்பான துறைசார் விகிதங்களுடன் ஒப்பிடும்போது, மீளாய்வாணடில் வங்கியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்களில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வங்கியின் மூலதனம் மீதான திரும்பல் (ROE) விகிதம் மற்றும் சொத்து மீதான திரும்பல் விகிதம் முறையே 16.87 சதவீதம் மற்றும் 0.69 சதவீதம் குறைவடைந்து காணப்படுவதுடன், கருத்தில் கொள்ளப்பட்டதன் கீழ் மீளாய்வாண்டின் இலாபத்தன்மை குறைவடைந்து காணப்படுகின்றமை பிரதானமான காரணமாகும்.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் 18.5 சதவீத்தினால் திரவச் சொத்து விகிதம் குறைவடைந்து காணப்பட்டது. எவ்வாறாயினும் இவ் விகிதமானது தொழில் சாரசரியில் 47.7 சதவீதற்கு மேலாகவுள்ளன.

(iii) 31 திசெம்பர் 2018 இல் வங்கியின் மொத்த மூலதனத்தின் போதுமான தன்மை 16.14 சதவீதமாக அறிக்கையிடப்பட்டுள்ளது, இது குறைந்தபட்ச சட்டரீதியான தேவைப்பாடான 12.875 சதவீதத்தை விட அதிகமானதாகும்.

(iv) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம ஆண்டில் வங்கியின் தேறிய வட்டி எல்லை 0.19 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டிலிருந்து ரூபா. 35.23 மில்லியன் பெறுமதி செலவிடப்பட்டு வங்கியின் தலைமை அலுவலக வாளகத்தினுள் கட்டப்பட்ட 18 மாடி கட்டடத்திற்கான கட்டுமான வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. எனவே அதற்கேற்பட்ட செலவினங்கள் சிக்கனமற்ற கொடுப்பனவாக காணப்படுகின்றன. | 18 மாடி கட்டடத்திற்கான திட்டம் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் (சி.இ.சி.பி) உள்ளிட்ட வெளிவாரி தொழில்சார் நிறுவனத்துடன் தொடங்கப்பட்டுள்ளது, மேலும் இந்த மூலதன செலவு அவர்களின் தொழில்சார் சேவைகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டணத்தை குறிக்கிறது. மேலும், நகர்ப்புற மேம்பாட்டு அதிகாரசபை (யுடிஏ) தங்களுக்குச் சொந்தமான நிலத்தை தலைமை அலுவலக கட்டிடத்திற்கு அருகில் 50 ஆண்டு குத்தகைக்கு ஒதுக்க ஒப்புக்கொண்டுள்ளது. யுடிஏ இடமிருந்து நிலத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக பல விவாதங்களைத் தொடர்ந்து ஆராயப்பட்டன, அதன்படி தலைமை அலுவலக வளாகத்தில் முக்கிய முன்னேற்றங்கள் பின்னர் திட்டமிடப்படும். | தேவையான அனுமதியினை பெற்ற பிறகு நிலுவைத் தொகையை எழுத தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 நவம்பர் முதல் ஆகஸ்ட் 2018 வரையான காலப்பகுதி தலைமை அலுவலக கிளையில் வேலை செய்த ஊழியர்களினால் போலியான 16 கடன்கள் உருவாக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டிருந்ததுடன் கட்டணங்களை போலியான அடையாள அட்டைகளை பயன்படுத்தி அவர்களினால் 16 சேமிப்புக் கணக்குகள் உருவாக்கப்பட்டு கட்டணங்கள் செலவு வைக்கப்பட்டிருந்தன. அந்த மோசடியால் ரூபா. 25.6 மில்லியன் வங்கிக்கு நிதி இழப்பு ஏற்பட்டிருந்தன. குற்றவாளி வங்கி சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு பொலீஸ் காவலில் அடைக்கப்பட்டிருந்தர். பிரதிவாதிக்கு எதிராக கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு எண் 11288/18 இன் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகின்றது. கவனக்குறைவாக செயல்பட்டதால் மேற்குறிப்பிடப்பட்ட மோசடிக்கு மேலும் ஐந்து அதிகாரிகள் காரணம் என்று அடையாளம் காணப்பட்டு, 30 ஜனவரி 2019 திகதியிட்ட விசாரணை அறிக்கையின் மூலம் அவர்களுக்கு எதிராக தேவையான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்பட்டனர். தலைமை அலுவலகத்தின் கிளையில் 32 கடன் ஆவணக் கோவைகள் தவறவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 16 கடன் கோவைகள் போலியாவை என கண்டறியப்பட்டிருந்தன. | இழப்புகள் தொடர்பான உங்கள் கருத்துக்களை நாங்கள் கருத்தில் கொள்கின்றோம். 32 எண்ணிக்கையான ஆவணக்கோவைகள் தலைமை அலுவலக கிளையில் தவறவிடப்பட்டதுடன் அவற்றில் 16 ஆவணக்கோவைகள் போலி கடன ஆவணக்கோவைகளாகும். தொடர்புடைய செயல்பாடுகளைச் செய்தபின் கணினியிலிருந்து வெளியேற கிளைகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அங்கீகரிக்கப்படாத பதிவுகளைத் தடுக்க கணினி இப்போது மேம்படுத்தப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளைத் தவிர்க்க வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| அ) | 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 2 (அ) மற்றும் அதற்கான திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் பொருள் இலங்கை மக்களிடையே, குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட வழிமுறைகள் உள்ளவர்களிடையே சேமிப்பை மேம்படுத்துவதாகும். சேமிப்பின் இலாபகரமான முதலீடு மிகவும் | கருத்தில் கொள்ளப்பட்டது | சந்தை பெறுமதி விகிதத்துடன் இணக்கமாக வங்கியின் வைப்பு அடிப்படை வளர்ச்சி விகிதத்தை பராமரிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதிசெய்ய |

| | | | |
|---|---|---|---|
| | திரட்டப்பட்டது. வங்கியின் வைப்பு (சேமிப்பு) தளத்தை 2010 முதல் 2018வரையிலான காலப்பகுதிக்கான வங்கித் துறை மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கித் துறையுடன் ஒப்பிடுவதன் மூலம் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.<br><br>• வங்கித் துறையின் அடிப்படையில் மொத்த வைப்பு 2010 முதல் 2018 வரை 228 சதவீதம் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், அந்த காலகட்டத்தில் என்எஸ்பி 136 சதவீத வைப்பு அடிப்படை வளர்ச்சியை அடைந்தது. எனவே என்எஸ்பி இன் சந்தைப் பங்கு 2010 இல் 13.7 சதவீதத்திலிருந்து 2018 இல் 9.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.<br><br>• உரிமம் பெற்ற சிறப்பு வங்கித் துறையுடன் ஒப்பிடும்போது என்எஸ்பி இன் சந்தை பங்கு 2010 இல் 82.1 சதவீதத்திலிருந்து 2018 இல் 77.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.<br><br>• வருடாந்த வளர்ச்சி வங்கித்துறையின் வைப்பினை அடிப்படையாக கொண்டு வங்கித்துறையில் உரிய காலத்தின கீழ் வருடாந்த வளர்ச்சி குறைவடைய சட்டத்தில் குறிக்கோள்கள் அடையப்பட்டிருந்தன.<br><br>• 2010/2011 ஆம் ஆண்டைத் தவிர்த்து, தங்கள் நிறுவனத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த வளர்ச்சியின் இலக்கை வங்கி அடையந்திருக்கவில்லை. | | வேண்டும்.. |
| ஆ) | 31 திசெம்பர் 2018 இல் வங்கியினுடைய மூலதன வியாபார நியமங்களை கருத்திற் கொண்டு 41 நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்கு கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் முகப்பெறுமதியாக ரூபா. 3,273 மில்லியனாகவும் சந்தையில் சந்தை இழப்பு ரூபா. 1,552 மில்லியனைக் குறிப்பிடுகின்றது. ரூபா. 1,169 மில்லியன் முதலீடு செய்த ஒன்பது நிறுவனங்களுடன் கொள்வனவுடன் ஆண்டிற்குப் பின்னர் எந்தவிதமாக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்தில் கொள்ளப்பட்டது | வங்கிக்கு இலாப விகிதத்தை பெற்றுக்கொள்வதற்கு மூலதன பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கவும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 38.8 பெர்ச் பரப்பளவு கொண்ட காணி 2008 ஆம் ஆண்டில் நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரச் சபையிடம் 50 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும், இந்த காணி கடந்த 10 ஆண்டுகளாக முறையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | 38.8 கொள்வனவு அளவைக் கொண்ட குத்தகைக்கு விடப்பட்ட யுடிஏ காணி நிரந்தர அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்படவில்லை, ஏனெனில் இந்த காணி யுடிஏ இனால் 106 பெர்ச் பக்கத்து காணியிலிருந்த குடும்பங்களை குடியேற்றுவதற்காக அடையாளம் காணப்பட்டது, இது யுடிஏவிடம் இருந்து நீண்ட கால குத்தகைக்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த வளாகத்தில் பல மாடி கட்டிடம் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன | வங்கியின் பயனுள்ள வேலைக்கு நிலத்தைப் பயன்படுத்துங்கள். |

## 3.5 ஏனைய நிறுவனங்களிற்கு விடுக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிஈடி 12 இன் பத்தி 9.4 இன் படி, ஒரு நிறுவனத்தின் ஊழியர் அமைச்சரவை அல்லது வேறு எந்த நிறுவனத்திற்கும் அமைச்சரவையின் ஒப்புதல் இல்லாமல் விடுவிக்கப்படக்கூடாது, மேலும் அத்தகைய காலகட்டத்தில் விடுவிக்கப்பட்ட ஊழியருக்கு எந்தவொரு ஊதியத்தையும் நிறுவனம் செலுத்தக்கூடாது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டில், மேலே சுற்றறிக்கையின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு எதிராக எட்டு ஊழியர்கள் நான்கு அமைச்சகங்களுக்கு விடுவிக்கப்பட்டனர்.<br><br>குறிப்பிட்ட ஊழியரின் விடுதலை தொடர்பான சரியான ஆவணங்கள் அவர்களின் தனிப்பட்ட கோப்புகளில் சேர்க்கப்படவில்லை.<br>விடுவிக்கப்பட்ட ஊழியர்களின் ஊதியம், கூடுதல் நேரம், போனஸ், மருத்துவம் மற்றும் விடுப்பு என்காஷ்மென்ட் ஆகியவற்றை செலுத்த வங்கியின் | அமைச்சகங்களுக்கு விடுவிக்கப்பட்ட எட்டு ஊழியர்கள் மீண்டும் வங்கியின் சேவைக்கு அழைக்கப்பட்டனர். அதன்படி, அவர்கள் அக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் 2018 இல் வங்கியில் கடமைகளை ஏற்றுக்கொண்டனர். தற்போது, வங்கி எந்த ஊழியரையும் அமைச்சகங்களுக்கு விடுவிக்கவில்லை | பிற நிறுவனங்களுக்கு வளங்களை வெளியிடும்போது கூறப்பட்ட திசையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிசெய்யவும். |

மொத்த செலவு ரூபா. 6.12 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், இந்த தொகையை சம்பந்தப்பட்ட அமைச்சகம் திருப்பிச் செலுத்தவில்லை.

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) 2018 திசெம்பர் 31 இல் 4,978 ஊழியர்களுக்கான வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>▪ 2018 திசெம்பர் 31 இல் வங்கியின் 4,512 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 4,262 நிரந்தர ஊழியர்கள் மற்றும் 250 ஒப்பந்த அடிப்படை உழியர்கள் காணப்பட்டனர். எனினும், அத்திகதியில் 466 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன.<br>▪ 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிரேஸ்ட தரத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 870 ஆக இருந்த போதிலும் உண்மை பதவியணியினராக 565 நிரந்தர ஊழியர்களும் மற்றும் 5 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களும் ஆக 570 பேர் காணப்பட்டனர்.<br>▪ 2018 ஆம் ஆண்டில் சிரேஸ்ட மட்டத்தில் 300 பதவிகளுக்கு தொடர்ந்தும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களில் ஆறு உதவி முகாமையாளர்கள், 26 பிரதி முகாமையாளர்கள், 07 சிரேஸ்ட முகாமையாளர்கள் மற்றும் 08 இரகசிய செயலாளர் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர். வங்கியின் தொழிற்பாடுகள் சுமூகமான முறையில் நடைபெறுகின்றது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டில் சிரேஸ்ட மட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு 236 ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்ட காலப்பகுதியில் சிரேஷ்ட உத்தியோகத்தருடைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 7 ஏஜீஎம்எம், 21 பிரதி முகாமையாளர், 42 சிரேஷ்ட முகாமையாளர்கள், 61முகாமையாளர்கள், 156 உதவி முகாமையாளர்கள் வங்கி மற்றும் வங்கியற்ற துறையியர் 236 பதவியேற்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டில் வங்கியின் மனிதசக்தி திட்டத்தினை மாற்ற வங்கியின் பிரிவுகள் மற்றும் அனைத்து கிளைகள் கோரப்பட்டிருந்பதன. உள்ளக பதவி ஏற்றங்கள் மற்றும் ஆளணியினருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. | வங்கியின் சுமூகமான செயல்பாடுகளுக்கு தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) பணியாளர் உதவியாளர் (தரம் VI) மற்றும் அலுவலக உதவியாளர் (தரம் VII) ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களில் இருந்த வெற்றிடங்களை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு | தரம் VI மற்றும் தரம் VII ஊழியர்களுக்கு சீரான மற்றும் வெளிப்படையான ஆட்சேர்ப்பு |

| | | |
|---|---|---|
| ▪ வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட ஆளிணியிர்கள் 5,406 எண்ணிக்கையில், பணியாளர் உதவியாளர் மற்றும் அலுவலக உதவி பதவிகளுக்கு முறையே அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்கள் முறையே 2,066 மற்றும் 563 ஆகும். அதன்படி மொத்த பணியாளர்களில் 48.6 சதவீதம் (%) மேற்கண்ட பதவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது<br><br>▪ தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரிடமிருந்து பகிரங்கமாக விண்ணப்பங்களை அழைக்காமல், அமைச்சு மற்றும் நிர்வாகத்தால் அனுப்பப்பட்ட பட்டியல்களைப் பயன்படுத்தி மேற்கண்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது. எனவே இலங்கை தொழில் சந்தையில் வேலை தேடும் ஒட்டுமொத்த மக்களுக்கும் இது நியாயமற்றதாக காணப்படுகின்றன.<br><br>▪ 2018/2019 காலப்பகுதியில், 6 மாத பயிற்சி காலம் மற்றும் 1 வருட ஒப்பந்த காலத்திற்குப் பிறகு பணியாளர் உதவியாளர் பதவியில் உள்வாங்கும் நோக்கத்துடன் 39 விண்ணப்பதாரிகள் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர். அதே காலப்பகுதியில் அலுவலக உதவியாளர் பதவியில் உள்வாங்கும் நோக்கத்துடன் 37 எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அந்த ஆட்சேர்ப்புகள் அமைச்சு மற்றும் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட பட்டியல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை, ஆட்சேர்ப்பு பணியில் எந்த வெளிப்படைத்தன்மையும் காணப்படவில்லை. 31 யூலை 2019 இல் பணியாளர் உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளில் உள்வாங்க காத்திருக்கும் மொத்த ஊழியர்கள் முறையே 146 மற்றும் 62 ஆக காணப்படுகின்றனர். | பயிற்சியாளர் மற்றும் அலுவலக உதவியாளர்களின் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் இது போன்ற ஆட்சேர்ப்புகளுக்கு வெளிப்படையான பொறிமுறையைப் பின்பற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது | நடைமுறை அறிமுகப்படுத்தப்படுவதை உறுதிசெய்யவும். |
| (iii) ஐந்து ஊழியர்கள் தங்கள் ஆட்சேர்ப்புக்குத் தேவையான குறைந்தபட்சத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்தில் கொள்ளப்பட்டது. | வங்கி ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தேவையான தகைமையை உடைய திருப்திகாரமான தகுதியான நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதனை உறுதிப்படுத்துத |

ல வேண்டும்.